ORIGINAL ARTICLE

# தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தலில் பேச்சுத் திறனின் செல்வாக்கும் ஆளுமையும்
# [TAMIḺ MOḺIK KAṞṞAL KAṞPITTALIL PĒCCUT TIṞAṈIṈ CELVĀKKUM ĀḶUMAIYUM]

# INFLUENCE AND PERSONALITY OF SPEAKING SKILLS IN TAMIL LANGUAGE LEARNING AND TEACHING

சேகர் நாராயணன்*[1] / Sagar Narayanan *[1]

[1] Department of Tamil, Ipoh Teachers Education Institute, Malaysia.
Email: segarnarayanan@yahoo.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/128

**Abstract**

Speaking is one of the basic language skills. Personality is called ‘personality’. Therefore, it is very important to have influence on speech as well as how much physical and mental resources are essential for personality development. This study examines the extent to which personality skills are important for a teacher to be able to speak in the teaching of learning. This dissertation was based on a book review and an observation among Tamil teachers at school. Vocabulary is the ability to take the word. Vocabulary is required to be a leader in any field, no matter who you are. This study examines the importance or influence of speaking skills among teachers. Approaches such as observation and interview were carried out among the Tamil teachers in this study. Speaking skill in classroom teaching is an important part of every teacher. Conceptual speaking and clear speech will refine classroom teaching. Improving these elements will help students in the classroom and fully engage in their learning. This review was conducted from a number of angles for each teacher to dominate in speaking skill. This study shows that effective learning in teaching can be achieved if each teacher acquires an influential personality in speaking skills.

**Key words:** Personality, influence, speaking skills, approach, effectiveness

**ஆய்வுச் சாரம்**

அடிப்படை மொழித்திறன்களில் பேச்சுத்திறன் ஒருவருக்கு அடிப்படையாக அமைகிறது. ஆளுமை என்பது 'personality' என அழைப்பர். எனவே, ஆளுமைத்திறன் மேம்பாட்டிற்கு உடல்வளமும் உளவளமும் எத்தனை இன்றியமையாததோ அதே போன்று பேச்சுத்திறனில் செல்வாக்குப் பெறுவது மிகவும் முக்கியமாகும். இவ்வாய்வு கற்றல் கற்பித்தலில் பேச்சுத் திறன் ஓர் ஆசிரியருக்கு எந்த அளவிற்கு ஆளுமைத் திறனும் செல்வாக்கும் முக்கியம் என்பதை ஆய்வு செய்கிறது. இந்த ஆய்வுக்கட்டுரை நூல் ஆய்வையும் பள்ளியில் தமிழ் ஆசிரிடையே ஊற்றுநோக்கு அணுகுமுறையையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. சொல்லாண்மை என்றால் சொல்லை எடுத்தாளுகின்ற திறன். எந்தத் துறையில் இருப்பவராக இருந்தாலும் அந்தத் துறையில் ஆளுமை மிக்கவராக இருப்பதற்குச் சொல்லாண்மை தேவை. இந்த ஆய்வானது தமிழாசிரிடையே பேச்சுத் திறனின் முக்கியத்துவம் அல்லது செல்வாக்கினை ஆராய்வது. ஆசிரியர் ஒருவர் பேச்சுத்திறனில் கைவற திறன் பெற்றால் மட்டுமே அவருடைய கற்றல் கற்பித்தல் விளைபயன்மிக்கதாக அமையும் என்பது திண்ணம். உற்றுநோக்கல், நேர்க்கானல் போன்ற அணுகுமுறையை இந்த ஆய்வில் தமிழாசிரிகளிடையே மேற்கொள்ளப்பட்டது. வகுப்பறைக் கற்பித்தலில் பேச்சுத்திறன் ஒவ்வொரு ஆசிரியருக்கும் முக்கியமான ஒன்றாகும். கருத்தாழமிக்கப் பேச்சும், தெளிவான பேச்சும் வகுப்பறைக் கற்பித்தலைச் செம்மைப்படுத்தும். இக்கூறுகளை மேம்படுத்தினால் வகுப்பறையில் மாணவர்கள் ஆசிரியர்களை மிகவும் நேசித்துத் தங்களுடைய கற்றலில் முழுமையாக ஈடுபடுவர். இவ்வாய்வானது ஒவ்வொரு ஆசிரியரும் பேச்சுத்திறனில் ஆளுமைப்பெற பல கோணங்களில் மேற்கொள்ளப்பட்டதாகும். இவ்வாய்வானது கற்றல் கற்பித்தலில் ஒவ்வொரு ஆசிரியரும் பேச்சுத் திறனில் செல்வாக்கும் ஆளுமையும் கைவறப் பெற்றால் விளைபயன்மிக்கக் கற்றல் கற்பித்தலை உருவாக்கமுடியும் என்பதைக் காட்டுகிறது.

**கருச்சொற்கள்:** ஆளுமை, செல்வாக்கு, பேச்சுத்திறன், அணுகுமுறை, விளைபயன்மிக்க

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 15th January 2021, revised 8th February 2021, accepted 3rd March 2021

## முன்னுரை

உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை மற்றொன்று ஆசிரியரின் வகுப்பறை. தாயின் கருவறையில் உயிரைப் பெறுகிறான். ஆசிரியரின் வகுப்பறையில் அவன் அறிவைப் பெறுகிறான். வகுப்பறையில் அடிப்படை மொழித்திறன்களில் பேச்சுத்திறன் ஒருவருக்கு இன்றியமையாததாக அமைகிறது. ஆளுமை என்பது 'personality' என அழைப்பர். எனவே, ஆளுமைத்திறன் மேம்பாட்டிற்கு உடல்வளமும் உள்ளவளமும் எத்தனை

இன்றியமையாததோ அதே போன்று பேச்சுத்திறனில் செல்வாக்குப் பெறுவது மிகவும் முக்கியமாகும் என்கிறார் (Andavar, M. 2009)[1]. சொல்லாண்மை என்றால் சொல்லை எடுத்தாளுகின்ற திறன். எந்தத் துறையில் இருப்பவறாக இருந்தாலும் அந்தத் துறையில் ஆளுமை மிக்கவராக இருப்பதற்குச் சொல்லாண்மை தேவை. சொல்லாண்மை மிக்கவராக இவரின் சொல்லைக்கேட்டு உலகமே அவர் சொற்படி நடக்கும் என்கிறார் வள்ளுவர். மலேசியத் தமிழ்மொழிக் கலைத்திட்டமானது தமிழ்மொழி வாயிலாக மாணவர்கள் பிறருடன் தொடர்பு கொள்ளவும் தங்கள் எண்ணங்களை மொழியில் வெளிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அடிப்படை மொழி திறன்களான கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றோடு செய்யுள் மற்றும் இலக்கணக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இக்கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **பேச்சுத் திறனில் தகவல் பறிமாற்றத்திறன்**

பிறரிடம் தெரிவிக்க விரும்புகிற செய்தியைக் கேட்பவர்கள் அல்லது அதைப்படிப்பவர்கள் உடனே கடைப்பிடிக்கும் அளவுக்குத் திறம்பட தகவலைத் தெரிவிக்கின்ற ஆற்றல் எவர் ஒருவர் பெற்றிருக்கின்றாரோ அவர்களே பேச்சுத்திறனால் ஆளுமைத்திறன் மிக்கவர்கள் என்கிறார் அறிஞர் சாக்ரடீஸ் (Kannadasan. 1971)[2]. இந்த ஆற்றலைப் பெற்றவர்களாக இருப்பவர் ஆளுமைத்திறனை மேம்படுத்திக்கொள்ள விரும்புகிறவர்கள் இந்தத் தகவல் பரிமாற்றத்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- **வகுப்பறைக் கற்பித்தலில் பேச்சே முதன்மையானது**

ஒருவர் மற்றொருவருக்கு ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்பினால் பல்வேறு முறைகளில் தெரிவிக்கலாம். காட்டாக, சைகைகளின் மூலம், படங்களின் மூலம் தெரிவிக்கலாம். இவற்றை non-verbal communication என்பர். ஆனால், சொற்கள் (verbal) மூலம்தான் நாம் மிகுதியாக தகவல்களைத் தெரிவிக்கின்றோம். சொற்களைப் பயன்படுத்தித் தகவ்ல் தெரிவிப்பதில் எழுத்து மற்றும் பேச்சு என இருவகை இருந்தாலும், தகவல் பரிமாற்றத்தில் முக்கால் பகுதி பேச்சு மூலம்தான் நடைபெறுகிறது என்கிறார் (Murugesan. 2019)[3]. ஒரு நாளைக்குச் சராசரியாக ஒருவர் 34020 சொற்களைப் பேசுகின்றனர். ஆகவே, பேச்சே முதன்மையானது. அன்றாட வாழ்வில் குடும்பத்தில், அலுவலகத்தில், ஆட்சி மன்றத்தில், வணிகத்தில் மற்றும் அக, புறவாழ்வின் அனைத்து நிலையிலும் பேச்சு மூலமே மிகுதியான தகவல்களைப் பறிமாறிக்கொள்கின்றோம் என்கிறார் (Muthukumar, P. 2017)[4] நமது நாட்டில் எந்தத் தொழிலில் ஈடுப்பட்டாலும் அவற்றில் 70% துறைகளில் பணியாற்றப் பேச்சுத்திறன் மிக முக்கியம். நாம் பேசுகின்ற பேச்சு பொருள் பொருந்திய மற்றும் கருத்தாழம் மிக்கவையாக அமைதல் வேண்டும். இதனையே வள்ளுவர்,

> சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
> வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து


என்கிறார். அதனோடு, சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டுமே சொல்லவேண்டும். பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது என்பதை,

சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயணிலாச் சொல்

என்றும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

வகுப்பறையில் மாணவர்களின் செயல்முறைத் திட்ட அடிப்படையில் (Performance based instruction) மொழிக்கற்றலை வகுப்பது புதிய உத்தியாகக் கையாளப்படுகிறது. பல்வேறு பேச்சுச் சூழல்களை வகுத்துக் கொடுத்து மாணவர்களை அப்பேச்சுச் சூழல்களில் ஈடுபடுத்துவது அவர்களின் மொழிக் கற்றல் திறமையைச் சிறந்த வகையில் வளர்க்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்றனர் மொழியாராய்ச்சியாளர்கள்! இலக்கணம் கற்றுக் கொடுத்தல் மட்டுமே மொழிக்கற்றல் என்பதோ மொழியைப் பற்றித் தெரிந்து கொள்வது மட்டுமே மொழியறிவு என்பதோ அல்லாமல் அதற்கும் மேலாக மாணவர்களை மொழிச் சூழல்களில் தங்களைச் சிறப்பாக ஈடுபடுத்திக்கொள்கின்ற திறமையைப் பெறுவதே மொழிக்கற்றலின் மேன்மையான பங்கு எனலாம். இரண்டாம் மொழியாக ஒரு மொழியைக் கற்கும் போது பேச்சுத் திறமையையும் எழுத்துத் திறமையையும் நன்றாகக் கற்றுக்கொள்ள பெரும்பாலான மாணவர்கள் தினறுகின்றார்கள் என்கிறார் (Kumaran, R. 2018)[5.] இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்று முதல் மொழியாகத் தமிழைப் பேசுவோர் போன்று மொழித்திறமையை அவர்களால் பெற இயலுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

**பேச்சுத்திறனில் ஆளுமைப் பெறுவதற்கு இதனைப் பின்பற்றலாம்**




*படம் 1.* திறன்வளர் பயிற்சிகள்

“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழ் நாப்பழக்கம்” என்ற சான்றோர் வாக்கை நாம் மறத்தல் கூடாது. பாத்திரத்தில் இருந்தால் தான் பரிமாற முடியும். அதாவது “சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும்”. நிறைய சொற்களை அறிந்திருந்தால் தான் அவற்றைப் பயன்படுத்திப் பேச முடியும். இத்தகைய சொற்களை நிறையப் பெறுவதற்குப் பள்ளிச் சூழலில் பல்வேறு பயிற்சிகளை ஆசிரியர்கள் அறிமுகம் செய்தல் வேண்டும்.

நமது பகுதியில் நடைபெறுகின்ற விழாக்கள் குறித்து மாணவர்களை உரையாடும் படி ஆயத்தம் செய்தால் அவர்கள் மிகவும் ஆர்வமும் அத்தகைய உரையாடலில் பங்கேற்றுப் பேசத் தொடங்குவார்கள்.

- **மாணவர்கள் பேச்சுத் திறனால் எதையும் சாதிக்கலாம்**

"ஆளுமை வளர்ச்சி ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கும் மிக முக்கியமான விஷயம். பள்ளி அல்லது கல்லூரி மாணவர்கள், வேலைக்குப் போகிறவர்கள் என யாராக இருந்தாலும், அவர்களுக்கு ஆளுமை வளர்ச்சி மிகவும் அவசியம். பேச்சுத்திறன், எழுத்துத் திறன், உடை அலங்காரம், சூழ்நிலையைச் சமாளிக்கும் திறன், தலைமை வகிக்கும் பண்பு, நேர்காணலில் பேசும் திறன் எனப் பலவும் ஆளுமைக்குள் அடங்கும். ஒவ்வொரு திறனும் வித்தி யாசமானவை என்றாலும் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு.

ஆளுமைத் திறனில் மிகவும் முக்கியமான இடம் பேச்சுத் திறன் என்று அழைக்கப்படும் (Communication) கம்யூனிகேஷனுக்குதான்" என்கிறார் கார்த்திக். மேலும் அவர், "நாம் சொல்வதை உள்வாங்கி மற்றவர் புரிந்து கொண்டு பதில் சொல்வதுதான் கம்யூனிகேஷன். பேசும்போது சாதாரண மாகப் பேசிவிடுகிறோம். ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும்போதும் நாம் பேசும் தன்மை, குணம், தைரியம், அறிவுத்திறன் அனைத்தும் வெளிப்படும். பேச்சுத்திறனில் இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும் என்கிறார் (Ravendaran. 2018)[6].

சொல்லக்கூடிய விடயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அதே சமயம், அதை யாரிடம் சொல்கிறோமோ, அவர்கள் கேட்கக்கூடிய நிலையில் இருக்கிறார்களா? என்று உறுதிசெய்ய வேண்டும். அதேபோல் மற்றவர் சொல்வதை முழுமையாகக் கேட்க வேண்டும். மற்றவர் பேசுவதைக் கேட்கும் பொறுமைதான் நமக்கு இருப்பதில்லை. கம்யூனிகேஷன் என்பது, கருத்து வேற்றுமை உண்டாகாமல், வார்த்தையால் புரியவைப்பது. சொல்ல வந்ததைத் தவறாக வெளிப்படுத்தும்போது அது கருத்து வேற்றுமை, மனவருத்தம், உறவில் விரிசல் போன்ற சிக்கலை ஏற்படுத்தும் என்கிறார் (Ratheneswari, R. 2020)[7]. இதற்கு எபெஃக்டிவ் கம்யூனிகேஷன் (Effective Communication) அவசியம்.

சில நேரங்களில் நம்முடைய உணர்வைச் சரியாகக் கையாள முடியாமல் போகும்போது நாம் சொல்ல வருவதைத் தெரிவிக்க முடியாமல் போகும். அந்த நேரத்தில் உணர்ச்சிவசப்படாமல் தெளிவாகச் சிந்தித்துப் பேச வேண்டும். தவறான விஷயத்தைச் சரி என்று வாதாடக் கூடாது. வாதாடு வதைத் தவிர்த்தாலே சக நண்பர்கள் மத்தியில் நாம் ஹீரோவாக இருப்போம். ஒருவர் நன்றாக உடை அணிந்திருந்தால் மட்டும் போதாது. நாம் பேசும் வார்த்தைகள்தான் நம்மை யார் என்று உறுதிசெய்யும் என்கிறார் (Karthegesu, C. 2019)[8]. எதை, யாரிடம், எப்படி, எப்போது பேசுகிறோம் என்ற தெளிவு வேண்டும்.

நாமே பேசுவது, மற்றவர் பேசும்போது பேசாமல் இருந்து கவனிப்பது, இன்னொருவர் பேசுவதைச் சமாளிப்பது, மற்றவர் பேசுவதைக் கண்டுகொள்ளாமல் இருப்பது இந்த

நான்கையும் திறம்படக் கையாளுவதுதான் எஃபெக்டிவ் கம்யூனிகேஷன். ஆகவே, பேச்சுத்திறனை வசப்படுத்த அடிப்படை பொது அறிவு மட்டும் இருந்துவிட்டால் போதாது. நாகரிக பேச்சும் அவசியம். இவை அனைத்தையும் விட பேசும்போது, நாம் சொல்வதை மற்றவர் கவனிக்கிறாரா? கேட்டும் கேட்காமல் இருக்கிறாரா? பதில் சொல்ல விருப்பம் இல்லையா? எனப் பல கோணங்களில் யோசிக்க வேண்டும்.

தாய்மொழியில் எப்படி வேண்டுமென்றாலும் பேசலாம். ஆனால், ஆங்கிலம் சர்வதேச மொழியாக திகழ்ந்துவருகிறது. இதில்தான் நாம் திறமையை அதிகமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். நகரத்தில் படிக்கும் மாணவர்கள் ஓரளவு இந்தப் பிரச்னையை சமாளித்துவிடுவார்கள். ஆங்கிலவழி மாணவர்களுக்கும் இதில் சிரமம் இருக்காது. ஆனால், கிராமத்தில் படித்துவிட்டு நகரத்தில் கல்லூரிப் படிப்புக்காக வருபவர்கள் தங்களின் சக மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும்போது, தாழ்வு மனப்பான்மையால் கூனிக்குறுகிப் போகிறார்கள்.

ஒரு மொழியில் சரளமாகப் பேச வேண்டும் எனில் மொழியின் சொற்களையும் வாக்கிய அமைப்புகளையும் திறம்படக் கற்றுக்கொள்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் பல்வேறு மொழிச்சூழல்களைப் பற்றி அறிவது அவற்றின் நுண்மையை ஆய்வது அச்சூழல்களில் திறம்பட தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் வழிவகைகளை அறிவது போன்றவை பேச்சாற்றலின் ஆளுமையை மேம்படுத்தும் என்கிறார் (Venu Suppaih. 2019)[9].

இவ்வாய்வில் பெறப்பட்ட தரவுகள் பேச்சுத் திறனில் செல்வாக்கும் ஆளுமையும் பெற வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரின் கடமையும் பொறுப்பும் ஆகும். பத்து தமிழ்ப்பள்ளியில் இருபது ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட உற்றுநோக்கலிலும் நேர்காணலிலும் பேச்சுத் திறனில் செல்வாக்கும் ஆளுமையும் இருந்தால் மட்டுமே கற்றல் கற்பித்தலானது விளைபயனாக அமையும் தெளிவாகக் காட்டுகிறது.

அதற்கு அவசியமே இல்லை. ஆங்கிலம், தமிழ் போல் ஒரு மொழிதான். பேசப் பேசதான் வரும். அதனால் தவறாகவே இருந்தாலும் நண்பர்களிடம் ஆங்கிலம் பேசிப் பழகலாம். அப்போதுதான் மொழி அறிவை வளர்த்துக்கொள்ள முடியும். பேசும் முறையைக் கற்றுக்கொண்ட ஒருவருக்கு மொழித்திறனும் இருந்துவிட்டால் ஆளுமைத் திறனும் தானாக வந்துவிடும். பேசும்போது கவனிக்க வேண்டியவை:

* ஒருவரை மட்டம் தட்டிப் பேசக்கூடாது.
* அர்த்தமில்லாமல் வீண் வாதங்களைத் தவிர்க்க வேண்டும்.
* கோபத்தில் பேசும்போதுகூட வார்த்தையைக் கவனித்துப் பேசவேண்டும்.
* மாணவர்களிடம் பேசும்போது அவர்களை ஊக்குவிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும்.
* மற்றவர்களுக்குப் புரியும்படி பேச வேண்டும்.
* சொல்ல வரும் விடயத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்க வேண்டும்.

* மாணவர்கள் விவாதங்கள், கலந்தாய்வுகளில் ஆர்வம் செலுத்த வேண்டும்.
* பேசும்போது முதலில் சாதகமான விஷயத்தைச் சொல்லிவிட்டு பிறகு பாதகமான செய்தியைச் சொல்ல வேண்டும்.
* வெளிப்படையாகப் பேசுவதை எல்லார் முன்னிலையிலும், ரகசியங்களை மறைமுகமாகவும் பேசவேண்டும்.

எனவே, வகுப்பறைக் கற்பித்தலில் பேச்சுத்திறன் ஒவ்வொரு ஆசிரியருக்கும் முக்கிய ஒன்றாகும். கருத்தாழமிக்கப் பேச்சும், தெளிவான பேச்சும் வகுப்பறைக் கற்பித்தலைச் செம்மைப்படுத்தும். (Gomati, A. 2020)[10] இக்கூறுகளை மேம்படுத்தினால் வகுப்பறையில் மாணவர்கள் ஆசிரியர்களை மிகவும் நேசித்துத் தங்களுடைய கற்றலில் முழுமையாக ஈடுபடுவர். “கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு” (Natarajan Thambu. 2020)[11] என்பது போல ஆசிரியரின் ஆளுமைத்திறனும் செல்வாக்கும் என்றென்றும் நிலைத்து நிற்பது திண்ணம்.

## References:


1. Andavar, M. (2009). *Pallūṭaka vaḻi ilakkiya kaṟṟal kaṟpittal* [*Teaching Literary Learning the Multimedia Way*]. Chennai: Seasons Publishers.
2. Kannadasan. (1971). Kaṇṇatācaṉ kavitaikaḷ [*Kannadasan Poems*]. Chennai: Vanati Publications.
3. Murugesan. (2019). *Paṉṉōkkup pārvaiyil tamiḻmoḻiyum ilakkiyamum* [*Tamil language and literature in a multifaceted perspective*]. Coimbatore: Piraku Publications.
4. Muthukumar, P. (2017). *Moḻittiṟaṉkaḷum kaṟṟakkaṟpittalil toḻilnuṭpamum* [*Language skills and technology in teaching*]. Chennai: Vanati Publications.
5. Kumaran, R. (2018). *Ilakkiyam kaṟpittal* [*Teaching literature*]. Chennai: Kannadasan Publications.
6. Ravendaran. (2018). *Kaṟṟal-kaṟpittal ceyalpāṭukaḷil kaṟṟal tuṇaic cātaṉaṅkaḷiṉ payaṉpāṭṭunilai* [*Utilization of learning aids in learning-teaching activities*]. Sri Lanka: Marina Publications.
7. Ratheneswari, R. (2020). *Iṭainiṭaippaḷḷit tamiḻāciriyarkaḷiṉ kaṟṟal kaṟpittalil nuṇṇāyvuc cintaṭaittiṟaṉa* [*Intermediate school Tamil teachers' critical thinking in the teaching of learning*]. Kula Lumpur: Jeyabakti Publications.
8. Karthegesu, C. (2019). *Tamiḻ kaṟpittalil uṉṉatam* [*Excellent in teaching Tamil*]. Sri Lanka: Tarsana Publications.
9. Venu Suppaih. (2019). 21-Ām nūṟṟāṇṭiṉ ilakkaṇa ilakkiyam – kaṟṟal kaṟpittal tiṟaṉkaḷum puttākkac cintaṉaiyum [*21st Century Grammar Literature - Learning and Teaching Skills and Innovative Thought*]. Kuala Lumpur: Jeyabakti Publications.
10. Gomati, A. (2020). Tamiḻmoḻi ilakkaṇam kaṟṟal kaṟpittalil varaikataiyiṉ payaṉpoṭu [*The use of graphics in the teaching of Tamil grammar learning*] Kuala Lumpur: Uma Publications.
11. Nadarajan Thambu., Noor Banu Mahathir Naidu., Ganesan Shanmugavelu., & Sukadari. (2020). Developing higher order thinking skills through blended learning among moral education students. *Journal of Critical Reviews*, *7*(14), 2521 2530. https://doi:10.31838/jcr.07.14.485